Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 28.8.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 28.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

15ஆவது இந்தோ-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று ஜப்பானுக்கு புறப்பட்டு செல்கிறார்.

ஜப்பானிலிருந்து, பிரதமர், வரும் 30-ஆம் தேதி சீனா சென்று, **ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்**பின் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

ஜன்தன் திட்டத்தினால் நாட்டு மக்கள் அனைவரும் நிதிக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால், நாடே முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

நாட்டிலேயே புதுச்சேரியில் தான், **கல்லூரி அடர்த்தி விகிதம்** அதிகம் என்று, மாநில அரசின் உயர்கல்வி துறை இயக்குநர் திரு அமன் ஷர்மா கூறி உள்ளார்.

மோடி-ஜப்பான்

ஜப்பானிய பிரதமர் திரு. ஷிகேரு இஷிபா-உடனான, 15ஆவது இந்தோ-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று ஜப்பானுக்கு புறப்பட்டு செல்கிறார். 2014ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றது முதல், திரு. நரேந்திர மோடி ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்வது இது 8-ஆவது முறையாகும். பிரதமரின் ஜப்பானிய பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்.......

**(வாய்ஸ்)**

மோடி-ஜப்பான்

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளையும் நாளை மறுநாளும் ஜப்பானில் தங்கி இருக்கையில், இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை, ஜப்பானிய பிரதமருடன் இணைந்து மறு ஆய்வு செய்கிறார். முக்கியமான பிராந்திய, மற்றும், சர்வதேச பிரச்சனை குறித்தும், இருதலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

இந்தியாவும்-ஜப்பானும், பல்வேறு பிரச்சனைகளில் ஒரே மாதிரியான கருத்துக்கள், மாண்புகள், மற்றும், நம்பிக்கையை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்பதும் இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், 22 பில்லியன் டாலர் அளவைத் தாண்டி தொடர்ந்து அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

*மோடி-ஜப்பான்-சேர்க்கை*

ஜப்பானிலிருந்து பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 30-ஆம் தேதி சீனா சென்று மறுநாள் 1-ஆம் தேதி, சீனாவின் டியான்ஜின் நகரில் **ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்**பின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார். சீன அதிபர் திரு **ஜி ஜின்பிங்** அழைப்பின் பேரில் இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே உலகத் தலைவர்கள் பலரையும், பிரதமர் இருதரப்பு ரீதியில் சந்திக்கிறார். இந்தியா 2017-ஆம் ஆண்டு முதல், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உறுப்பு நாடாக இருந்து வருகிறது. **ஷாங்காய் ஒத்துழைப்பு அரசுத் தலைவர்கள் சபை**யின் தலைமைப் பொறுப்பையும், 2022-23-ஆம் ஆண்டில், இந்தியா வகித்துள்ளது.

*வாழ்த்து*

இன்று, நுவகாய் அறுவடை திருநாள் கொண்டாடும் ஒடிசா மாநில மக்களுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். விவசாயத்திற்கு மதிப்பளித்து விவசாயிகளுக்கு நன்றி செலுத்துவதற்கான வாய்ப்பு இது என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். நல்லிணக்கம் மற்றும் நெருங்கிய உறவுகளின் சின்னமான இத்திருநாள் அனைவரின் வாழ்விலும், அமைதி, வளம் மற்றும் மகிழ்ச்சியை கொண்டு வந்து சேர்க்கட்டும் என்றும் அவர் வாழ்த்தி உள்ளார். விவசாயிகளின் கடின உழைப்பே, அனைவரின் வாழ்விற்கும் ஆதாரம் என்றும், இத்தகைய விவசாயிகளுக்கும் நாம் அனைவரும் கடமைப் பட்டுள்ளோம் என்பதை நினைவூட்டும் நாளே நுவகாய் திருநாள் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். மலைவாழ் மக்கள் அதிகம் உள்ள மேற்கு ஒடிசாவில், குறிப்பாக சம்பல்பூர், பொலாங்கீர், சுந்தர்கார், காலாஹண்டி உள்ளிட்ட இடங்களில் நுவகாய் புதுஅமுது படையல் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

*முர்மு-இரங்கல்*

மகாராஷ்டிர மாநிலம் விரார் நகரில் கட்டிடம் இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு துயரம் வெளியிட்டு உள்ளார். விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் வேண்டுவதாகவும் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குடியரசு தலைவர் கூறி உள்ளார்.

*பருத்தி*

கச்சாப் பருத்தி மீதான இறக்குமதி வரி விலக்கை, செப்டம்பர் 30-ஆம் தேதி முதல், இவ்வாண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரை நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய ஜவுளித் துறைக்கு தேவையான கச்சாப் பருத்தி, தாராளமாக கிடைக்கும் வகையில் இம்முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக, மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. முன்னதாக இம்மாதம் 19-ஆம் தேதி அரசு அறிவித்த தற்காலிக வரி விலக்கு, அடுத்த 30-ஆம் தேதியுடன், முடிவடைவதாக இருந்தது.

*இந்தியா-முதலீடு*

யுபிஐ, ஜிஎஸ்டி போன்ற அரசின் பல்வேறு சீர்திருத்தங்களால் இந்தியா பற்றிய முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்து வருவதாக, கார்ப்பரேட் நிதி அறிக்கை வெளியீட்டு விதிமுறைகள் பற்றிய தேசிய ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் திரு நிதின் குப்தா கூறி உள்ளார். **தடையற்ற ஆளுகை** தொடர்பாக புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் உரையாற்றிய அவர், கார்பரேட் நிர்வாகத்தை வலுப்படுத்தி, **நிதி வெளியீட்டு விதிமுறை**களையும் அரசு எளிமைப்படுத்தி இருப்பதால் இந்திய பொருளாதாரம் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரித்து இருப்பதாகவும், இந்தியா தற்போது, **சேமிப்பாளர்களின் நாடு** என்பதற்கு மேல், **முதலீட்டாளர்களின் நாடாக**வே மேம்பட்டு வருவதாகவும் கூறினார்.

*விண்வெளி-கண்காட்சி*

தேசிய விண்வெளி தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக Space Kidz நிறுவனம் சார்பில் சென்னையில் நடைபெறும் 11-ஆம் ஆண்டுக் கண்காட்சியில் நாடெங்கிலும் இருந்து பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு அறிவியல் படைப்புகளை காட்சிக்கு வைத்துள்ளனர். காற்றில் உள்ள கரியமில வாயுவை ஆக்ஸிஜனாக மாற்றும் கருவி, எல்பிஜி சிலிண்டரில் இருந்து எரிவாயுக் கசிவு ஏற்பட்டால் அதை கண்டுபிடிக்கும் கருவி ஆகியன இதில் அடங்கும். கண்காட்சியில் பங்கேற்றுள்ள மாணவர்களில் பலர், கிராமப்புற அரசுப் பள்ளிகளை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஜன்தன்

அனைவருக்கும் வங்கி கணக்கு வழங்குவதற்கான பிரதமரின் ஜன்தன் திட்டம் 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் முறையான நிதிக் கட்டமைப்பிற்கு வெளியில் இருந்து அனைவரையும் உள்ளே கொண்டு வருவதன் மூலம் மக்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதில், இத்திட்டம் முக்கிய பங்காற்றி இருப்பதாக கூறினார். மக்கள் அனைவரும் நிதிக் கட்டமைப்பில் ஒருங்கிணைந்து ஒன்றாக பயணிப்பதால், ஒட்டு மொத்தமாக நாடே முன்னேறி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஜன்தன் திட்டம் மக்களின் கண்ணியத்தை மேம்படுத்தி, தங்களின் எதிர்காலத்தை தாங்களே தீர்மானிக்கும் அதிகாரத்தையும் மக்களுக்கு வழங்கி இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார். அரசின் நேரடி ரொக்க மானியம் திட்டம் மற்றும் பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களின் பலன்களை மக்களுக்கு வழங்குவதற்கான முக்கிய வசதியாக ஜன்தன் வங்கிக் கணக்குகள் அமைந்து இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தமது செய்தியில் கூறி உள்ளார். கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில், 56 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு ஜன்தன் கணக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், இக்கணக்குகளின் மொத்த நிதி இருப்பு, 2.68 லட்சம் கோடி ரூபாய் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மொத்தம் உள்ள ஜன்தன் வங்கி கணக்குளில் 67 சதவிகிதம் கிராமப்புற மக்களுக்காகவும், 56 சதவிகிதம், பெண்களுக்காவும் திறக்கப்பட்டவை என்பதையும் நிதி அமைச்சர் சுட்டிக்காட்டி உள்ளார்.

ஜன்தன்-புதுச்சேரி

புதுச்சேரியில் உள்ள ஜன்தன் வங்கி கணக்குகளின் எண்ணிக்கை குறித்து, மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி மேலாளர் திரு சதீஷ்குமார் எமது செய்தியாளரிடம் பேசுகையில் …………

(வாய்ஸ்-சதீஷ்குமார்)

ஜன்தன்-புதுச்சேரி-2

புதுச்சேரியைச் சேர்ந்த ஜன்தன் திட்ட பயனாளிகளில் ஒருவரான திரு எழில் திட்டத்தினால் தாம் பெற்ற நன்மைகள் குறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில் …………..

(வாய்ஸ்- எழில் )

*கல்லூரி படிப்பு*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 1 லட்சம் மக்கள் தொகைக்கு 53 கல்லூரிகள் இருப்பதாகவும், நாட்டிலேயே புதுச்சேரியில் தான் **கல்லூரி அடர்த்தி விகிதம்** அதிகம் என்றும், மாநில அரசின் உயர்கல்வி துறை இயக்குநர் திரு அமன் ஷர்மா கூறி உள்ளார். கல்லூரி முதல்வர்களின் மேலாண்மை திறன் மேம்பாடு குறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற பயிலரங்கில் பேசுகையில் அவர் தெரிவித்தார். புதுச்சேரியில், கல்லூரிப் படிப்பில் சேரும் மாணவர் விகிதம் 61.5 சதவிகிதமாக உள்ளதாகவும், நாட்டிலேயே சண்டிகருக்கு அடுத்தபடியாக புதுச்சேரியில் தான் இந்த விகிதம் அதிகம் என்றும் அவர் கூறினார். ஐதராபாத் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் அப்பாராவ் போடிலே, புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு, **யுஜிசி-மாளவியா இயக்க** ஆசிரியர் பயிற்சி மையத்தின் இயக்குநர் பேராசிரியர் அருள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*ஜிப்மர்*

புதுச்சேரி ஜிப்மரின் புதிய தலைவராக டாக்டர் சித்ரா சர்க்கார் நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டின் முன்னோடி நரம்பியல் நிபுணர்களில் ஒருவரான டாக்டர் சித்ரா சர்க்கார், 2018-ஆம் ஆண்டு முதல், மேற்குவங்க மாநிலம் **கல்யாணி எய்ம்ஸ் மருத்துவமனை**யின் தலைவராக பதவி வகித்து வருகிறார். இந்திய அறிவியல் துறையின் 100 முக்கிய பெண் அறிஞர்கள் குறித்து **இந்திய அறிவியல் அகாடமி** வெளியிட்ட பட்டியலில் டாக்டர் சர்க்கார் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத் தக்கது. ஜிப்மர் தலைவராக டாக்டர் சர்க்கார் நியமிக்கப் படுவதால், ஜிப்மரில், கல்வி, ஆராய்ச்சி, மற்றும், வளர்ச்சியில் புது யுகம் பிறக்கும் என்று, ஜிப்மர் இயக்குநர் **டாக்டர் வீர்சிங் நேகி** கூறி உள்ளார்.

*வானிலை*

நேற்று வடமேற்கு வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று, காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுக் குறைந்து சட்டீஸ்கர் பகுதிகளில் நிலவுகிறது. இதுஅல்லாது தென்னிந்தியப் பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், செப்டம்பர் 3-ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் கோவை-திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் கனமழையும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் கனமழையும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல்

பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக கோவை மாவட்டம் சின்னக் கல்லாரில், 6 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*தேசிய விளையாட்டு*

நாடு முழுவதும் தேசிய விளையாட்டு தின கொண்டாட்டங்கள், நாளை முதல், வரும் 31-ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. அனைவரும் ஒருங்கிணைந்து விளையாடி ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவோம் என மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம் கூறி உள்ளது

*.பாரா போட்டி*

புதுடெல்லி ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் அடுத்த மாதம் 27 முதல், அக்டோபர் 5-ஆம் தேதி வரை நடைபெற உள்ள உலக பாரா தடகள சாம்பியன் பட்டப் போட்டிகளுக்கான இந்திய வீரர்-வீராங்கனைகளின் பெயர்களை அரசு அறிவித்துள்ளது. ஈட்டி எறிதல் வீரர் சுமித் அன்டில் தலைமையிலான இக்குழுவில், 19 பெண்கள் உட்பட 73 பேர் இடம் பெற்றுள்ளனர். பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் 3 முறை பதக்கம் வென்ற உயரம் தாண்டுதல் வீரர் மாரியப்பன் தங்கவேலு, புதுடெல்லி பாரா தடகள சாம்பியன் பட்டப் போட்டிகளுக்கான இந்தியக் குழுவில் இடம் பெறவில்லை.

*அமித் ஷா*

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நாளை அசாம் மாநிலம் குவஹாத்தியில், குவஹாத்தி ஆளுநர் மாளிகையின் புதிய **பிரம்மபுத்ரா சிறகத்தை** திறந்து வைக்கிறார். தேசிய **சைபர் தடயவியல் பரிசோதனை** கூடத்தை மெய்நிகர் முறையில் அவர் திறந்து வைத்து, பாதுகாப்பு படையினரின் பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார். குவஹாத்தியில் உள்ளாட்சி பிரதிநிதிகள் 20 ஆயிரம் பேரின் பங்கேற்புடன் நாளை நடைபெற உள்ள **பஞ்சாயத்து சன்மிலன்** மாநாட்டிலும் திரு அமித் ஷா கலந்து கொள்கிறார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

15ஆவது இந்தோ-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று ஜப்பானுக்கு புறப்பட்டு செல்கிறார்.

ஜப்பானிலிருந்து, பிரதமர், வரும் 30-ஆம் தேதி சீனா சென்று, **ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்**பின் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

ஜன்தன் திட்டத்தினால் நாட்டு மக்கள் அனைவரும் நிதிக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால், நாடே முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

நாட்டிலேயே புதுச்சேரியில் தான், **கல்லூரி அடர்த்தி விகிதம்** அதிகம் என்று, மாநில அரசின் உயர்கல்வி துறை இயக்குநர் திரு அமன் ஷர்மா கூறி உள்ளார்.
இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 28.8.2025/Script.

-----------------------------